**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.10.2023**

**Case No : CC 175 /2019**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** மாடத்தி | **Caste:** |
| **Father / Husband Name:** வழிகாத்த பெருமாள் | **Calling:** |
| **Village:** தச்சன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 61** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.10.2023**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது **தச்சன்விளையில்** குடியிருந்து வீட்டில் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். 4ம் எதிரி பரமேஸ்வரியின் வீட்டு சாக்கடை என் வீட்டுப் பக்கத்தில் வருவது சம்பந்தமாக எனக்கும், 4ம் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 10.06.2019ம் தேதி மாலை 4.00 மணிக்கு நானும், என் மகன் சுப்பையா, என் கணவர் ஆகியோர் எங்கள் வீட்டின் அருகே உள்ள அய்யாக்குட்டி என்பவர் இடத்தில் அய்யாக்குட்ட சொன்னதின் பேரில் முள் வேலி கம்பி நட்டி கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த 4ம் எதிரி பரமேஸ்வரி எங்களிடம் இங்கு முள்கம்பி நடக்கூடாது என்று பிரச்சனை செய்தார். பின்பு அவர் மற்ற எதிரிகளுக்கு போன் மூலம் தகவல் செய்து வரச்சொன்னார். அங்கு வந்த எதிரிகளில் முருகன் இரும்பு கம்பியாலும், சுப்பிரமணியன் கம்பாலும், இசக்கிராஜா கல்லாலும் என்னையும், என் கணவர் மற்றும் மகனை தாக்கினார்கள். அதனால் எனக்கு உதடிலும், காயம் ஏற்பட்டு பல்லும் உடைந்துவிட்டது, முதுகிலும் காயம் ஏற்பட்டது. என் கணவருக்கு முதுகிலும், இடது சுண்டு விரலிலும் காயம் ஏற்பட்டது. என் மகனுக்கு வலது கை ஆட்காட்டி விரலிலும் , இடது கை பெருவிரலிலும் காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை பார்த்த நல்லதாய், மாசாணம், சொர்ணம், சுப்பிரமணியம், முத்து ஆகியோர்கள் விலக்கி விட்டார்கள். எதிரிகள் போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிசென்றார்கள். காயம் பட்ட நாங்கள் மூவரும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு சென்றோம். நான் 6 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். என் கணவர் 5 நாட்கள் இருந்தார். என் மகன் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார். இது சம்பந்தமாக நான் காவல் துறையில் புகார் வாக்குமூலம் அளித்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் மருத்துவரிடம் சொன்ன தகவல் உண்மையானது என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று இரவு காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். 10.00 மணி இருக்கும் நேரம் சரியாக தெரியவில்லை. மருத்துவரிடம் சொன்ன தகவலை தான் காவல் துறையினரிடம் சொல்லியுள்ளேன். என் கணவர் விவசாயம் செய்கிறார். என் மகன் ஓட்டுநராக பணியாற்றி வருகிறார். நானும் என் கணவரும் முள்வேலி அடைக்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் கூலிக்கு செய்து வருகிறோம். அய்யாக்குட்டி என்பவர் சொன்னதின் பேரில் தான் நாங்கள் முள்வேலி அடைக்க சென்றோம். மற்ற பொருட்களை எங்களையே வாங்கி முள்வேலி கம்பி போடும்படி அய்யாக்குட்டி சொன்னார் என்றால் சரிதான். அதன்பேரில் கூலிப்பணம், வேலி போடாததால் தரவில்லை. வேலி அடைக்கும்போது அய்யாக்குட்டி சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை. அந்த இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்திற்கு பின்னிட்டு கம்பி வேலி அமைப்பதற்கான பொருட்கள் அங்கேயே தான் கிடந்தது என்றால் சரிதான். 4 மற்றும் 5 வது எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் வைத்து பேசப்பட்டது என்றால் சரிதான். கடைசியாக 4 மற்றும் 5 வது எதிரிகள் காவல் நிலையத்தில் கற்களை எடுக்க சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் சரஸ்வதிக்கும் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த பின்னிட்டு தான் இந்த கம்பி வேலி அமைக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கும் 4 மற்றும் 5 வது எதிரிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக பழி வாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முள்வேலி அமைக்கும் பணியில் ஈடுபடவில்லை வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ப.சா.2 மற்றும் 3 வாகனத்தில் செல்லும்போது ஏற்பட்ட காயத்தைக் கொண்டு பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் மருத்துவரிடம் சம்பவ இடம் குறித்து நடைபெற்ற இடத்தைதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to

be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.10.2023**

**Case No : CC 175 /2019**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** வழிகாத்த பெருமாள் | **Caste:** |
| **Father / Husband Name:** ராமன் | **Calling:** |
| **Village:** தச்சன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 69** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.10.2023**

முதல் விசாரணை

நான் தற்போது தச்சன்விளையில் குடியிருந்து வீட்டில் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி ஆவார். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். 4ம் எதிரி பரமேஸ்வரி வீட்டு கழிவு நீர் எங்கள் இடத்தில் வருவது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 10.06.2019ம் தேதி மாலை 4.00 மணியளவில் நானும், என் மனைவி மற்றும் மகன் ஆகியோரும் அய்யாக்குட்டி என்பவர் இடத்தில் கம்பி வேலி போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த 4ம் எதிரி பரமேஸ்வரி எங்களை ஆபாசமாக பேசி போன் மூலம் தகவல் சொல்லி மற்ற எதிரிகளை வரச்சொன்னார்கள். மற்ற எதிரிகள் வந்தவுடன் அவர்கள் நட்டிருந்த கற்களை பிடுங்கி எறிந்தார்கள். பின்பு என்னையும், என் மனைவி மற்றும் மகனையும் முருகன் கம்பியாலும் , சுப்பிரமணியன் கட்டையாலும், இசக்கிராஜா கற்களாலும் எங்களை தாக்கினார்கள். அதனால் எனக்கு முதுகில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது மற்றும் இடது சுண்டு விரலிலும் காயம் ஏற்பட்டது. என் மனைவிக்கு முதுகிலும், உதட்டிலும் காயம் ஏற்பட்டது. என் மகனுக்கு வலது ஆட்காட்டி விரலிலும், இடது பெருவிரலிலும் காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை இந்த சம்பவத்தை பார்த்த நல்லதாய், மாசாணம், சொர்ணம், சுப்பிரமணியம், முத்து ஆகியோர்கள் விலக்கி விட்டார்கள். எதிரிகள் போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிசென்றார்கள். காயம் பட்ட நாங்கள் மூவரும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு சென்றோம். நான் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். என் மனைவி 6 நாட்கள் இருந்தார். என் மகன் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் துறையில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

கம்பி வேலி அமைக்கும் தொழில் எத்தனை வருடமாக செய்து வருகிறோம் என்றால் அது என்னுடைய தொழில் இல்லை , ஆள் வைத்து செய்ய சொன்னார்கள். சம்பவத்தின்போது இரண்டு நபர்களான சுப்பிரமணியன், முத்துகிருஷ்ணன், ஆகியோர்களை வைத்து வேலி அமைக்க வந்திருந்தார்கள். சம்பவத்தின்போது இருவரும் அங்குதான் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பே எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். டிரக்கர் வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு வந்தோம். டிரக்கர் வாகனம் குறித்து எதுவும் தெரியாது. மருத்துவரிடம் எந்த இடத்தில், வைத்து யாரால், எந்த ஆயுதத்தால் காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். பின்னிட்டு தான் சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போதும் நான் விவசாயம் செய்து வருகிறேன். அய்யாக்குட்டி கம்பி வேலி அமைக்க சொன்னார் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது அய்யாக்குட்டி அங்கு இல்லை.நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கம்பி வேலி அமைக்கும் பணி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.10.2023**

**Case No : CC 175 /2019**

**Deposition of Witness : P.W. 3**

| | |
|---|---|
| **Name:** சுப்பையா | **Caste:** |
| **Father / Husband Name:** வழிகாத்த பெருமாள் | **Calling:** |
| **Village:** தச்சன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age:40** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.10.2023**

முதல் விசாரணை

நான் தற்போது தச்சன்விளையில் குடியிருந்து ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 என் பெற்றோர் ஆவார்கள். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 4ம் எதிரி பரமேஸ்வரி என்பவரிடம் கழிவு நீர் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 10.06.2019ம் தேதி மாலை 4.00 மணியளவில் நான் மற்றும் அ.சா.1 அங்கிருந்த அய்யாக்குட்டி என்பரிடன் இடத்தில் முள்வேலி கம்பி அமைத்துகொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த 4ம் எதிரி பரமேஸ்வரி முள் வேலி நடக்கூடாது என்று தகராறு செய்தார். பின்பு மற்ற எதிரிகளிடம் போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் வந்து நட்டிருந்த முள்வேலி கம்பியை பிடுங்கி எறிந்துவிட்டார்கள். பின்பு எங்களை இரும்பு கம்பி மற்றும் கம்பு , கற்கள் ஆகியவற்றால் தாக்கினார்கள். என்னையும், என் அம்மா மற்றும் அப்பாவையும் முருகன் கம்பியாலும் , சுப்பிரமணியன் கட்டையாலும், இசக்கிராஜா கற்களாலும் எங்களை தாக்கினார்கள். அதனால் எனக்கு வலது ஆட்காட்டி விரலிலும், இடது பெருவிரலிலும் காயம் ஏற்பட்டது. எனது அப்பாவிற்கு முதுகு மற்றும் இடது சுண்டுவிரலிலும், எனது அம்மாவிற்கு முதுகு மற்றும் உதட்டிலும் காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை இந்த சம்பவத்தை பார்த்த நல்லதாய், மாசாணம், சொர்ணம், சுப்பிரமணியம், முத்து ஆகியோர்கள் விலக்கி விட்டார்கள். எதிரிகள் போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிசென்றார்கள். காயம் பட்ட நாங்கள் மூவரும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு சென்றோம். என் அப்பா 6 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். என் அம்மா 6 நாட்கள் இருந்தார். நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

மொத்தம் இரண்டு கற்கள் நட்டிருந்தோம். அதனை சேதப்படுத்திவிட்டார்கள். மொத்தம் 11 கற்கள் சம்பவ இடத்தில் தான் இருந்தது. கம்பி வேலியும் அங்கு தான் கிடந்தது. போலீசார் உடைந்த கற்கள் மற்றும் அரிவாளைக் கைப்பற்றினார்கள். கற்களை அய்யாக்குட்டி என்பவர்தான் வாங்கி கொடுத்தார்கள். அதன் மதிப்பு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயம் குறித்து மருத்துவரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, 2 மற்றும் நான் மூன்று பேர் தான் பணியில் இருந்தோம், வேறு யாரும் இல்லை. அய்யாக்குட்டி இடம் எங்கள் இடத்திற்கு மேற்கு புறம் உள்ளது. கந்தன் என்பவரின் காலி இடமும் எங்கள் இடத்திற்கு மேற்கு புறம் உள்ளது. அ.சா.1 மற்றும் 2க்கு காயங்கள் ஏற்பட்டது குறித்து மருத்துவரிடம் நான் தான் சொன்னேன். 4 மற்றும் 5வது எதிரிகளுக்கும் எங்களுக்கும் கழிவு நீர் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. அது சம்பந்தமாக எந்த புகாரும் கொடுக்கவில்லை. எங்களுக்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தைப் பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக என் தாயார் அ.சா.1ன் மூலம் பொய்யாக புகார் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.10.2023**

**Case No : CC 175 /2019**

**Deposition of Witness : P.W. 4**

| | |
|---|---|
| **Name:** நல்லத்தாய் | **Caste:** |
| **Father / Husband Name:** திரவியம் | **Calling:** |
| **Village:** தச்சன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age:37** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.10.2023**

முதல் விசாரணை

நான் தற்போது தச்சன்விளையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், பக்கத்து வீட்டை சேர்ந்தவர். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் கழிவு நீர் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது. கடந்த 10.06.2019 ம் தேதி மாலை 4.00 மணியளவில் 4 வது எதிரி வீட்டு பின்னால் சண்டை நடக்கும் சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன். அப்போது அங்கு முருகன் கம்பியாலும், இசக்கி கல்லாலும், சுப்பிரமணியன் கம்பாலும் அ.சா.1,2 மற்றும் 3 ஐ அடித்தார்கள். அதனால் அ.சா.1 க்கு உதட்டில் ரத்தக்காயம் ஏற்பட்டது. அ.சா.2 மற்றும் 3 க்கு காயம் ஏற்பட்டது. சம்பவத்தை பார்த்து நானும் அருகில் இருந்தவர்களும் விலக்கி விட்டோம். காயம் பட்ட மூவரும் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அடித்துக்கொண்டு சத்தம் கேட்டபோது நான் அங்கு சென்று பார்த்தேன். எனக்கும் 4 ம் எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. 1 வது எதிரி சுப்பிரமணியன் என்பவர் வீட்டிற்கு முன்னால் வழக்கு சம்பவம் நடைபெற்றது. கம்பி வேலிகள் அமைத்த பணிகள் எனக்கு எதுவும் தெரியாது. எத்தனை கற்கள் நடப்பட்டது என்றால் 6 அல்லது 7 கற்கள் நடப்பட்டிருக்கும். நான் அ.சா.1 டம் கடன் அவசரத்திற்கு வாங்குவது வழக்கம் என்றால் இல்லை. எனக்கும் 4 ம் எதிரிக்கும் ஏற்கனவே உள்ள முன்விரோதத்தின் காரணமாக அ.சா.1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.10.2023**

**Case No** : **CC 175 /2019**

**Deposition of Witness** : **P.W. 5**

| | |
|---|---|
| **Name:** மாசாணம் | **Caste:** |
| **Father / Husband Name:** சுடலைமுத்து | **Calling:** |
| **Village:** தச்சன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age:**52 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.10.2023**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தச்சன்விளையில் குடியிருந்து சவரத்தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், பக்கத்து வீட்டை சேர்ந்தவர். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் கழிவு நீர் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது. கடந்த 10.06.2019 ம் தேதி மாலை 4.00 மணியளவில் 4 வது எதிரி வீட்டு பின்னால் சண்டை நடக்கும் சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன். முருகன் கம்பியாலும், சுப்பிரமணியன் கட்டையாலும், இசக்கிராஜா கல்லாலும் அ.சா.1 முதல் 3 ஐ அடித்தார்கள். அதனால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது. சம்பவத்தை பார்த்து நானும் அருகில் இருந்தவர்களும் விலக்கி விட்டோம். காயம் பட்ட மூவரும் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 முதல் 3 மருத்துவனைக்கு பின்னிட்டு காவல் துறையினர் அங்கு வந்து அன்றையதினம் மாலை 6.00 மணிக்கு விசாரித்தார்கள். சம்பவத்தின்போது சுற்றி சுமார் 50 நபர்கள் இருப்பார்கள். யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.2 ன் தோட்டத்திற்கு நான் மற்றும் என் மனைவியும் வேலைக்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் 2 கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை விசாரித்தபோதே ப.சா.6 ஐயும் காவல் துறையினர் விசாரித்தார்கள்.

Taken down by me in the open

court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 17.10.2023**

**Case No** : **CC 175 /2019**

**Deposition of Witness** : **P.W. 6**

| | |
|---|---|
| **Name:** சொர்ணம் | **Caste:** |
| **Father / Husband Name:** மாசாணம் | **Calling:** |
| **Village:** தச்சன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age:58** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 17.10.2023**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தச்சன்விளையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், பக்கத்து வீட்டை சேர்ந்தவர். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் கழிவு நீர் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 4.00 மணியளவில் 4 வது எதிரி வீட்டு பின்னால் சண்டை நடக்கும் சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன். முருகன் கம்பியாலும், சுப்பிரமணியன் கட்டையாலும், இசக்கிராஜா கல்லாலும் அ.சா.1 முதல் 3 ஐ அடித்தார்கள். அதனால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது. சம்பவத்தை பார்த்து நானும் அ.சா.5 மற்றும் அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டோம். காயம் பட்ட மூவரும் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 முதல் 3 மருத்துவனைக்கு பின்னிட்டு காவல் துறையினர் அங்கு வந்து அன்றையதினம் மாலை 7.00 மணிக்கு விசாரித்தார்கள். சம்பவம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் அங்கு சென்றேன். சம்பவத்தின்போது சுற்றி நிறைய நபர்கள் இருந்தார்கள். அ.சா.2 ன் தோட்டத்திற்கு நான் வேலைக்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் 2 கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையின் படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open

court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.